மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.04/2022
உள்
அசல் வழக்கு எண்.52/2021
-------------

1. கு.வீரணன்
2. வீ.கண்ணன் ... மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்
ஆட்சித்தலைவர் அலுவலகம்
விருதுநகர்.
2. வருவாய் வட்டாட்சியர் அவர்கள்
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்
சாத்தூர்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்
வட்டார் வளர்ச்சி அலுவலகம்
சாத்தூர்.
4. ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள்
ஊராட்சி மன்ற அலுவலகம்
படந்தால் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 18.07.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 30.09.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதார்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஏ.விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் அரசுப்பணிகள் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு மனுவுரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், பிராது தபசில் கண்ட சொத்துக்களை பார்வையிட்டு அதற் தற்போதைய Physical Feature தன்மையையும் கண்டும் அளவீடுகள் செய்தும், வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய தகுதி வாய்ந்த சர்வேயருடன் கூடிய ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்ய உத்தரவிடக்கோரி 18.07.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதார்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

இந்த வழக்கில் பிராது தபசில் சொத்துக்களையும் அதன் Physical Feature -ஐயும் பார்வையிட்டு அளவீடு செய்தும், வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய ஓர் தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் கூடிய ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டியதாய் உள்ளது. அவ்வாறு கமிஷனர் நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்வதால் வழக்கில் ஏராளமான வாய்மொழி சாட்சிகள் விசாரிப்பதை தவிர்த்திட ஏதுவாகும். கமிஷனர் நியமனம் செய்வதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணையும் இருக்கப்போவதில்லை. அவ்வாறு நியமனம் செய்யாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் உண்டாக கூடியதாக உள்ளது. எனவே, பிராது தபசில் கண்ட சொத்துக்களையும் அதன் Physical Feature -ஐயும் பார்வையிட்டு அளவிடு செய்தும், வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய சர்வேயர் உதவியுடன் கூடிய ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து வைக்க உத்தரவிடக்கோரி 18.07.2022ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-**

வழக்கு சொத்தினை நீதிமன்ற ஆணையர் அவர்கள் மூலமாக அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்தால் வழக்கிற்கு எந்த வகையில் தெளிவுபடுத்தும் என்ற தெளிவான விளக்கம் தெரிவிக்கவில்லை. மனுதாரர்கள்

வெறும் Physical Feature மட்டும் பார்வையிட்டு அளவீடு செய்ய கூறியுள்ளார். Physical Feature பார்வையிடுவதன் மூலமாக வழக்கிற்கு எது பற்றிய விபரம் தெளிவுபடும் என்று எந்த விளக்கமும் தெரிவிக்கப்படவில்லை. அதனால் மனுதாரர்கள் மனு எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). **தீர்வு:-**</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு வழக்கு விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நிலையில், மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்படும் காரணங்கள் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் இந்நீதிமன்றத்தால் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்போ கஷ்ட நஷ்டமோ ஏற்படப்போவதில்லை என்பதோடு வழக்கு தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கும்பட்சத்தில் சரியான தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம்

கருதுவதால் இம்மனுவினை அனுமதிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இம்மனு அனுமதிக்கப்பட்டு ஆணையாளராக வழக்கறிஞர் திரு.பி.துரைப்பாண்டி அவர்கள் நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து தபசில் சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் உதவியுடன் இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. நீதிமன்ற ஆணையாளருக்கு ஊதியமாக ரூ.5000/-ஐ மனுதாரர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்ற ஆணையாளரிடம் நேரடியாக செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற ஆணையாளர் மனு தபசில் சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடத்தினை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா - 18.11.2022

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.